13.10.2025.

O.S.N0.284/2021 ,

D.W.2. திரு.ஹாமீம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த 23.12.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விவரம் எனக்கு மட்டும் தெரியாதா அல்லது குடும்பத்தில் யாருக்குமே தெரியாதா என்றால் குடும்பத்தில் யாருக்மே தெரியாது. அந்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 2007 ம் வருடம் தெரியும். எனக்கோ இரண்டு வருடங்கள் கழித்து செட்டில்மெண்ட் பற்றி தெரியும் என்கிறேன். ஆனால் எனது தகப்பனார் அவரது செட்டில்மெண்ட் பத்திரத்தில் அன்றைய தேதியிலேயே அனுபவத்தை ஒப்படைத்தாக சொல்வது பொய்தானே என்றால் அப்படி தான் பத்திரத்தில் வாசகம் எழுதுவார்கள். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் மகன்களுக்கு என்னென்ன பாகம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் பெண் மக்களுக்கு ஏன் பாகம் கொடுக்கவில்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் பெண் மக்கள் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சுயநினைவோடு அந்த பத்திரத்தை எழுதியிருந்தால் மேற்படி விவரங்களை சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. எனது அப்பா உடனே இறந்துவிடுவார் என்ற பயத்தில் அவசர கதியில் செட்டில்மெண்ட் பத்திரத்தை நாங்கள் எழுதி வாங்கியதால் அந்த

விவரங்கள் அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உரக்கடை வியாபாரத்தை பற்றியும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது மனைவி வீட்டில் இருந்து எனது மனைவி பாக சொத்தை நாங்கள் வாங்கியுள்ளேன் என்றால் எனது மாமனார் இறந்த அன்று எனது மனைவி பாகம் எனது மனைவிக்கு தானாக வந்துவிடும். பாகப்பிரிவினை இன்னும் ஆகவில்லை. எனது மனைவி பாக சொத்தை எனது மனைவி வாங்க தயாராகவுள்ளார். எனது தகப்பனாரா எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதியிருந்தாலும் நாங்கள் விரும்பினால் எங்கள் சகோதரிக்கு பாகம் கொடுக்கலாம். எனது விருப்பப்படி எனது சகோதரிக்கு பங்கு கொடுக்கலாம். ஆனால் சகோதரி கேட்டதால் நான் பங்கு கொடுக்க தயாராக இல்லை. நான் நல்ல செல்வந்தராக இருக்கிறேன். நான் 2009 ம் ஆண்டு வரை உரக்கடை வியாபாரம் நடத்தி வந்தேன். மேலப்பாளையத்தில் தொழில் செய்பவர்களுக்கு நான் முதலீடு செய்து அதற்கான பங்கு பெறுவேண். நான் எவ்வளவு முதலீடு செய்கிறேன் என்றால் எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது. எனது மகன் எம்.காம் படித்து வெளிநாட்டில் வேலை செய்கிறார். அவர் மாத வருமானம் வாங்குகிறார் என்றால் அவர் என்னிடம் சொல்லவில்லை. எனது இரண்டு மகள்களையும் நல்ல இடத்தில் தான் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். ஒரு மருமகன் பள்ளிக்கூட வாத்தியார், மற்றொரு மருமகன் கல்லூரியில் பேராசிரியராக உள்ளார்கள். எனது சகோதரர் ஷேக் என்பவரின் மகன் பி.இ படித்து முன்பு கத்தாரில் வேலை பார்த்தார். தற்போது வீட்டில் இருந்து வேலை பார்த்து வருகிறார். ஷேக் என்பவரின் மருமகன் சவுதிஅரேபியாவில் இன்ஜீனியராக வேலை பார்க்கிறார். 2ம்

பிரதிவாதியின் இரண்டு மகன்களும் துபாயில் தான் வேலை பார்க்கிறார்கள் என்றால் சரிதான். ஐதர்அலி பி.இ படித்துள்ளார் என்றால் சரிதான். அவரது மனைவி ஒரு டாக்டர் என்றால் சரிதான். அவர்களின் ஒரு மகன் இன்ஜீனியரிங் படித்து கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். அவர்களின் இன்னொரு மகள் சென்னையில் சர்ச்பார்க் காண்வெண்ட் படித்து வருகிறார் என்றால் பள்ளியில் படித்து வருகிறார் ஆனால் பள்ளியின் பெயர் தெரியாது. ஐதர் அலி சென்னையில் அடுக்குமாடி கட்டிடம் கட்டி வாடகைக்கு கொடுத்துள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வீடு சீரமைக்கும்போது ரூ.20 லட்சம் செலவழித்து கட்டினேன் என்றால் சரிதான். எனது இரண்டு மகள்களுக்கு ஒவ்வொருக்கும் 30 பவுன் நகை போட்டேன். எனது சகோதரர் மல்கானும் அவரது மனைவி வீட்டில் இருந்து மனைவி பாகத்தினை வாங்கியுள்ளார் என்றால் அவர் மனைவி அப்பா இறந்துவிட்டதால் அந்த சொத்தை வாங்கியுள்ளார். அவரது மனைவி அவரது சகோதரர்களுக்கு இணையாக பாகம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மல்கான் ஊரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். மல்கானும் தனது மனைவி வீட்டில் இருந்து பங்கு வாங்கிவிட்டு, தனது சகோதரிக்கு பங்கு கொடுக்க மறுக்கிறார் என்றால் அது மாமனார் சம்மந்தமாக எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை. ஆனால் பாகம் கொடுத்துவிட்டார்கள். எனது தகப்பனாருக்கு மலிக்கிபீவி என்ற சகோதரி உண்டு என்றால் சரிதான். மலிக்கிபீவி எனது பாட்டனார் திருமணம் செய்து வைத்தார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை மலிக்கிபீவிக்கு நல்ல சீர் சீராட்டுக்கள் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் அவரது

சகோதரிக்கு பங்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தனது சகோதரிக்கோ தனது சொத்தில் பங்கு கொடுத்த எனது தகப்பனார் தனது மகளுக்கு சொத்தில் பங்கு கொடுக்காமல் இருந்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் எழுதிய 2005 காலக்கட்டத்தில் எனது தகப்பனார் 81 வயது என்றால் நான் தோராயமாக 84 வயது என்று சொல்லிகிறேன். அப்போது அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் நன்றாக தான் இருந்தார். எனது தகப்பனாரை திருநெல்வேலி டாக்டரிடம் காட்டி குணப்படுத்தமுடியவில்லை என்பதால் வேலூர் சி.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கேயும் குணப்படுத்தமுடியாது என்று சொல்லியதால் ஊருக்கு அழைத்து வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் காட்டியதற்கான மருத்துவகுறிப்புகளை எனது சகோதரிடம் இருந்து நான் பெற்றுக்கொண்டேன் என்றால் காட்டினால் தானே பெற்றுக்கொள்ளமுடியும். எனது தகப்பனார் சுயநினைவு இல்லாமல் நடமாட்டம் இல்லாமல் 2005 ல் படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. அவருடைய வேலைகளை எல்லாம் உழவன் கணேசன் என்பவர் தான் கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் மலஜலம் கழித்தால் அவரை சுத்தம் செய்து அவரை குளிக்க வைப்பது, உணவு கொடுப்பது போன்றவற்றை கணேசன் தான் செய்து வந்தான் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் அமர முடியாது என்பதால் படுக்க வைத்து தான் குளிக்க வைப்பார் என்றால் சரியல்ல. அவருக்கு பார்க்க வருபவர்கள் யாரையும் யார் என்று தெரியாது என்றும் தலையை மட்டும் தான் ஆட்டுவார் என்றால் சரியல்ல. நாங்கள் யாருமே எனது தகப்பனாரை முறையாக கவனிக்கவில்லை என்றால் சுத்தபொய். சுயநினைவு இல்லாத எனது

தகப்பனாரிடம் இருந்து தான் அவரது கைரேகையை வைத்து 23.12.2005 செட்டில்மெண்ட் பத்திரத்தை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. 23.12.2005 செட்டில்மெண்ட் ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எத்தனை மணிக்கு எழுதினார்கள், யார், யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் சாட்சி கையெழுத்து செய்திருப்பவர்கள் எனக்கு உறவா என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆங்கிலத்தில் கையெழுத்து செய்யும் எனது தகப்பனார் சுயநினைவு இல்லாததால் தான் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கைரேகை பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் கை நடுக்கம் இருப்பதால் கைரேகை வைத்துள்ளேன் என்ற வாசகமும் நாங்கள் தான் எழுதியுள்ளோம் என்றால் இல்லை. இரண்டு முறை அவருக்கு கண் ஆப்ரேஷன் செய்வதற்காக அரவிந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரா தவிர அவருக்கு எந்த நோயும் இல்லை. நான் வழக்கிற்காக நான் அப்பட்டமான பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஒரு நாளும் உரக்கடையில் இருந்து வியாபாரம் செய்ததது இல்லை. 23.12.2005 ல் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி 22.02.2006 ல் அதை பதிவு செய்தற்கான காரணம் என்ன என்றால் எனக்கும் அது புரியாத புதிராக உள்ளது. எனது தகப்பனார் எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி தந்ததை சகோதரிகளுக்கு தெரியப்படுத்தியதற்காக எழுத்துப்பூர்வமான ஆவணம் இல்லை ஆனால் சகோதரிகள் எங்களிடம் வந்து கேட்டார்கள். சகோதரிகள் எங்களிடம் வந்து கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் எல்லா சகோதரிகளும் கேட்கவில்லை. மூத்த சகோதரி மட்டும் கேட்டார். செட்டில்மெண்ட் எழுதியபிறகு எத்தனை வருடங்கள் கழித்து அனுபவம்

எடுத்தோம் என்றால் ஒவ்வொரு சகோதரரும் ஒவ்வொரு வீட்டில் இருந்தோம். 2008 ம் வருடத்திற்கு பிறகு வீட்டிற்கு பெயர் மாற்றினோம். வயல்களுக்கு எப்போது பட்டா மாற்றினோம் என்றால் 2008 ற்கு பிறகு பட்டாக்களை மாற்றிவிட்டோம். சில பட்டாக்கள் எங்கள் பெயரில் அதற்கு முன்பே இருந்தது. செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட சொத்துக்களை நாங்கள் அனுபவம் எடுத்தோம் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் செட்டில்மெண்ட் சொத்துக்களை எங்களுக்கு அனுபவம் தரவில்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த செட்டில்மெண்ட் செல்லாது என்று சொன்னால் எனது தகப்பனார் இருக்கும்போதே அனுபவத்தை எங்களிடம் கொடுத்துவிட்டார். 21.01.2008 ல் எங்கள் சகோதரருக்கு மத்தியில் ஒரு ஏற்பாடு செய்துகொண்டாம் என்றால் சரிதான். 3 வருடம் கழித்து ஏற்பாடு எழுதியதற்கு காரணம் என்ன என்றால் எங்களுக்கு அஜஸ்மெண்ட் வரவேண்டியிருந்தது. இவ்வாறு 3 வருடங்கள் கழித்து ஏற்பாடு எழுதியதால் எனது தகப்பனார் எழுதி வைத்த செட்டில்மெண்ட ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 21.01.2008 ல் எங்களுக்குள் ஏற்பாடு எழுதிக்கொண்டதை எங்களது சகோதரிக்கு தெரியப்படுத்த எழுத்து பூர்வமான உண்டா என்றால் இல்லை. பெண் மக்களின் சொத்துக்களை அபகரிப்பதற்காக ரகசியமாக எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. 23.12.2005 செட்டில்மெண்ட ஆவணத்தையும் எங்களது சகோதரிக்கு தெரியாமல் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 17.01.2021 ல் தான் 23.12.2005 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி வாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. அவர் உடனே வழக்கு தாக்கல் செய்ததால் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை

என்று சொன்னால் சரியல்ல. 21.01.2008 தேதியில் எழுதப்பட்ட பல ஏற்பாடு ஆவணங்கள் எனதுதகப்பனார் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த தேதியில் 2 வது தபசில் சொத்தை பொறுத்து எனது தாயாரிடம் இருந்தும் சொத்துக்களை எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் சரிதான். இவற்றையெல்லாம் எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு எழுதி கொள்ளவேண்டும் என்ற அவசர கதியில் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல.

வாதிதரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

I Additional District Judge,
Tirunelveli.